25.07.2025 OS.No.47/2015 PW1 Name :.**கம்சலா**

15, 16 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பாத்திமா, ரீட்டா தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் கூடுதல் பதில் பற்றிய விவரம் எதுவும் தெரியாது. இறந்துள்ள பாலகிருஷ்ணன் பெயரில் தான் வழக்கு சொத்துகளுக்கு வருவாய் ஆவணங்கள் இருந்துள்ளது என்றால் தவறு. வழக்கு சொத்துகள் என்னுடைய மாமனார், மாமியார் சம்பாதித்தவை ஆகும். இறந்துள்ள பாலகிருஷ்ணன் அவருடைய மகன் மீது வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றது பற்றி தெரியாது. அந்த விவரங்களை பதிலில் கூறியுள்ளதால் பதில் பற்றிய விவரம் தெரியாது என சாட்சி கூறுகிறேன் என்றால் தவறாகும்.
2. பாத்திமா, ரீட்டா ஏற்கனவே இந்த வழக்கிற்கு முன்பாக வேறு இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் அது தவறாகும். ஏற்கனவே தாக்கல் செய்த வழக்குகளை குறிப்பிடாமல் இந்த வழக்கு போடபட்டுள்ளது என்றால் சரியல்ல. மீனாட்சி என்பவர் இறந்துவிட்டார். திருத்தல் மனு தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் அதுபற்றி நியாபகம் இல்லை. மற்ற 6 பாகஸ்தர்களுடன் எனக்கு சுமூமமான உறவு உள்ளது. அவர்கள் எங்களுக்கு எதிராக இருந்ததால் அவர்களை எதிர்தரப்பினராக சேர்த்துள்ளேன்.
3. இன்றைய தேதியில் வழக்கு சொத்துகள் யார் சுவாதீனத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. மர்மமான முறையில் இறந்த நபரின் கையெழுத்தை வாங்கியுள்ளதால் ஆவணங்கள் செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேன். ஆவணங்கள் ஏற்பட்டதற்கு பின் சுமார் 4, 5 ஆண்டுகள் பாலகிருஷ்ணன் உயிருடன் இருந்தார். அவர்

ஆவணங்கள் செல்லாது என எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்ற விவரம் எனக்கு நியாபகம் இல்லை. எந்த ஆண்டு திருமணம் ஆனாது என்று எனக்கு நியாபகம் இல்லை. 1957 முதல் 1966 காலகட்டத்தில் நான் அந்த வீட்டில் மருமகளாக இருந்தேனா என்றால் இருந்தேன்.

4. என்னுடைய முதல் குழந்தைக்கு சுமார் 60 வயது ஆகிறது. நானும் மற்ற வாதிகளும் ஒன்றாகதான் உள்ளோம். பத்திரங்களை விற்றவர்கள் யார் என்று தெரியாது நியாபகம் இல்லை. அதில் சாட்சிகளாக உள்ளவர்களை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. ஏற்கனவே பாத்திமா, ரீட்டா தாக்கல் செய்த வழக்குகளில் நான் சாட்சியம் கூறியுள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. 15 முதல் 19 பிரதிவாதிகள் பெயரிலான ஆவணங்களை நான் பார்க்கவில்லை. பாலகிருஷ்ணன் மர்மமான முறையில் இறந்ததாக கூறும் குற்றவழக்கில் எதிரிகள் பெயர் குறிப்பிடபடவில்லை.

5. என் கணவர் காணாமல் போன வழக்கு இன்றும் நிலுவையில் தான் உள்ளது. என் கணவர் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வழக்கில் தரப்பினர்களாக உள்ளார்களா என்று சரியாக நியாபகம் இல்லை. பாலகிருஷ்ணன் இறக்கும்போது அவருக்கு மனைவி பிள்ளைகள் யாரும் இல்லை. அவருக்கு பெற்றோர்களும் இல்லை. பாலகிருஷ்ணன் இறக்கும் முன் லட்சுமணன் வகையாரக்களுக்கு ஆவணங்கள் எதுவும் எழுதி கொடுக்கவில்லை.

6. 15, 16 பிரதிவாதிகள் பெயரிலான கிரைய ஆவணத்தில் எவ்வளவு தொகை குறிப்பிட்டுள்ளது என்று தெரியாது. கிரைய ஒப்பந்தம் பற்றிய விவரமும் நியாபகம் இல்லை. கிரய ஆவணம், கிரைய ஒப்பந்தம் இரண்டும் ஒரே நாளில் பதிவானது என்றால் நியாபகம்

இல்லை. 15, 16 பிரதிவாதிகளின் கிரைய சொத்திற்கு பாலகிருஷ்ணன் பெயரில் தனிபட்டா இருந்தது என்றால் சரியல்ல. அ.வ.எண். 24/2015 என்ற வழக்கு பாலகிருஷ்ணன் தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றது பற்றி தெரியாது. பாலகிருஷ்ணன் பெயரில் உள்ள சொத்திற்கு ஏற்கனவே பொதுஅதிகார ஆவணம் எழுதபட்டு பின்னர் ரத்து செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. பாலகிருஷ்ணன் ஆம்பூர் நீதிமன்றத்தில் அ.வ.எண். 72/2007 என்ற வழக்கு போட்டிருந்தார் என்பது பற்றி தெரியாது. அது தொடர்பான மேல்முறையீடு வழக்கு இதே நீதிமன்றத்தில் பாலகிருஷ்ணன் சதாகமாக தீர்ப்பானது என்றால் சரியல்ல. ஏற்கனவே நீதிமன்றத்தில் தீர்ப்பு கொடுத்த வழக்கிற்கு நான் பாகம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. கண்ணன் மகன் பிகே சண்முகம் என்பவரை தெரியாது. என் கணவரும் மகனும் பாலகிருஷ்ணனுக்கு சொத்து 02.04.1987ல் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

8. அந்த ஆவணத்தை ரத்து செய்ய வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் நியாபகம் இல்லை. 15, 16 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த சொத்துகள் பாலகிருஷ்ணனின் சுயராஜ்ஜித சொத்து என்றால் சரியல்ல. என் கணவருக்கு குடும்ப பாகத்தில் கொடுத்த சொத்தை தான் பாலகிருஷ்ணனுக்கு விற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. அனைத்து சொத்துகளுக்கும் வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் நியாபகம் இல்லை.

9. ரவி மனைவி அம்மு, பிரபாகரன் மனைவி லலிதா, பிரபாகரன் மகன் குமரன், பிரபாகரன் மகன் கவீன்குமார், பிரபாகரன் மகள் பீமாபாய், யார்

என்று நியாபகம் இல்லை. அவர்களை வழக்கில் கட்சி சேர்க்காமல் வழக்கு போட்டுள்ளது செல்லாது என்றால் சரியல்ல. வாசாஆ1 ஆவணத்தில் உள்ள விற்பனையாளர் லட்சமியம்மாள் யார் என்று நியாபகம் இல்லை. வாசாஆ2, 3 ஆவணத்தில் பெரியசூசை பற்றி என் கணவருக்கு தான் தெரியும். வாசாஆ4 ஆவணத்தில் உள்ள சேட்டு, தேவராஜ் யார் என்று தெரியாது.

10.வாசாஆ5 ஆவணத்தில் உள்ள சீனிவாசன் முதலியார் யார் என்று நியாபகம் இல்லை. வாசாஆ6 ஆவணத்தில் உள்ள விற்பனையார் லட்சுமணன் என் கணவர் மற்றும் என்னுடைய பிள்ளைகள் என்றால் நியாபகம் இல்லை. வாசாஆ7 ஆவணம் 15, 16 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் என்றால் தவறாகும். வாசாஆ8 ஒப்பந்தம் பத்திரம் என்றால் தவறாகும். வாசாஆ9 ஆவணத்தில் உள்ள பாண்டியன் யார் என்று நியாபகம் இல்லை. வாசாஆ10 ஆவணத்தில் உள்ள இளங்கோ யார் என்று நியாபகம் இல்லை என் கணவருக்கு தான் தெரியும்.

11. வாசாஆ11 ஆவணத்தில் உள்ள கொடிமலர் யார் என்று நியாபகம் இல்லை. வாசாஆ10 ஆவணத்தில் உள்ள வெங்கடாசலம் யார் என்று நியாபகம் இல்லை. வாசாஆ19 ஆவணத்தில் என் கணவர் பெயரும் மற்ற கூட்டு பாகஸ்தர்கள் பெயர் இல்லை. அதற்கு என்ன காரணம் என்றால் தவறாகும். வாசாஆ20 ஆவணத்தில் பாலகிருஷ்ணன் பெயரில் உள்ள தனிபட்டா என்றால் தவறாகும். தாவா 2இன சொத்து எங்களுடைய மாமனார் மாமியார் பெயரில் உள்ளது. பம்புசெட் கிணறு போன்றவற்றில் மற்ற பாகஸ்தர்கள் யார் என்று என் கணவருக்கு தான் தெரியும்.

12. என் கணவருடன் பிறந்தவர்களில் ராதாம்மாள் என்பவர் மட்டும்

தான் உயிருடன் உள்ளார். அவருக்கும் எங்களுக்கும் சுமூக உறவு இல்லை அவர்கள்தான் எங்களுக்கு எதிர்தரப்பினர் ஆவார். வழக்கு தாக்கல் செய்யாததற்கு முன் அறிவிப்பு கொடுக்காமல் தாக்கல் செய்துள்ளதற்கு காரணம் தெரியுமா என்றால் தவறாகும். அவ்வாறு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. வழக்கு சொத்துகளின் மொத்த மதிப்ப எவ்வளவு என்று எனக்கு தெரியாது.

13.15, 16 பிரதிவாதிகளின் கிரையய சொத்தில் பாகம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. அவைகள் பாலகிருஷ்ணனின் பாக சொத்துகள் என்றால் சரியல்ல. என் கணவர் பாகம் சொத்துகளை விற்றதாக ஆவணங்களில் உள்ளது என்றால் சரியல்ல. பாக வழக்கு சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. 15, 16 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு குறித்து குறிப்பிடாமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. அதனால் தான் மொத்த சொத்துகளுக்கான வருவாய் ஆவணங்ளும் வில்லங்க சான்றும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 25/07/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B
Digitally signed by RAJA B
Date: 2025.07.25 13:05:09 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.